# திருக்கோணமலை
# வில்லூன்றி
# அருள்மிகு ஸ்ரீ தர்மசாஸ்தா
# ஹரிஹரசுதன் ஐயப்ப சுவாமி

## ஊஞ்சல் பாடல்கள்



ஆக்கம் :

கவிஞர்.சோதிடர்.வி.சிகண்டிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# அருள்மிகு ஸ்ரீ தர்மசாஸ்தா
# ஹரிஹரசுதன் ஐயப்ப சுவாமி
## ஊஞ்சல் பாடல்கள்

01. திருமலையில் புகழ் பூத்த வில்லூன்றிக் கந்தன்
திவ்விய திருத்தல வீதி அருகோரம்
விருப்புடன் வந்திங்கு வேண்டுவோர்க்கருளும்
வடிவழகன் ஐயப்பன் தர்மசாஸ்தாவை
பெருமையுடன் ஊஞ்சலிசை பாடியே மகிழ
பழம்பெரும் தமிழினில் பொருள்வளம் பொதிய
கருணைமிகு கரிமுகன் கணபதி உந்தன்
கழலடி என்றுமே காப்பதாய் ஆக

02. சிவனுக்கும் மாலுக்கும் மகனாகப் பிறந்து
சீரோடு பந்தள அரமனையில் வளர்ந்து
புவனத்தைக் காத்திட புலிமீது அமர்ந்து
போற்றிடும் அடியார்கள் பூர்வவினை களைந்து
தவம் செய்து வருவோர்க்கு தரிசனமும் காட்டி
தடைதுயர் பிணிகளை இல்லாது ஓட்டி
விவரிக்க முடியாத வில்லூன்றி வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்

03. படிபதினெட்டுமே பலகையெனத் துலங்க
பக்திமிகு நால்வேதம் கயிறாகத் தாங்க
வடிவான மேனியிலே வாசனைகள் வீச
வண்ணம்மிகு அலங்காரம் ஆபரணம் மின்ன
முடிகொண்ட மன்னவனும் முனிவர்களும் போற்ற
முறையோடு மேலவர்கள் மலர்தூவி வாழ்த்த
குடிவாழும் வில்லூன்றிப் பதியினில் வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஈசனும் திருமாலும் இணைந்தருள் புரிய
இதமான இளந்தென்றல் சாமரம் வீச
தேசங்களெங்குமே தெய்வீகம் மலர
தெய்வங்கள் யாவுமே வாழ்த்தி மலர் தூவ
நேசமாய் வேண்டுவோர் நெஞ்சங்கள் மகிழ
நிலையான அருளின்பஆனந்தம் பெருக
தாசனின் வில்லூன்றிப் பதியினில் வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்

05. காவலாய் இருபுறம் கறுப்புடன் கடுப்ப
சாமிகள் நின்றபடி காவல் பணி புரிய
ஆவலாய் பூதகணம் அத்தனையும் போற்றி
ஐயப்பா என்றபடி அரும்பணிகள் செய்ய
பாவலர்கள் பண்கொண்டு பாடியுனைத் தேட
படியேறி வருவோர்கள் பாவங்களைப் போக்கும்
நாவலர் சூழ் வில்லூன்றிப் பதியினில் வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்

06. அரக்கியாம் மகிசீயை அழிப்பதற்காக
ஹரிஹர சுதனாக அவதாரம் எடுத்தாய்
வரம் பெற்ற மகிசீயை போர்தனில் வென்று
வாடிய வானவர்க்கு வழிசெய்து காத்தாய்
தரமான இடமாக சபரிமலை அமர்ந்து
தனைநாடி வருவோர்க்கு திருவருளைப் புரிந்து
திரளான வில்லூன்றிப் பதியினில் வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கார்த்திகை, மார்கழி மாதங்கள் வந்தால்
கண்கவர் பூசைகள் காட்சிகள் நிகழும்
நேர்த்தியாய் விரதங்கள் நோக்கியே வந்து
நெஞ்சுருகப் பாடியே நினைத்துன்னை மகிழ்வார்
பார்த்திடும் பார்வையால் பசிபிணி போக்கி
பதமலர் பணிவோர்க்கு பாதைகளை ஆக்கி
சேர்த்திடும் வில்லூன்றிப் பதியினில் வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்

08. காடுமலை கடந்துன்னை காண்பதற்காக
கட்டேந்தி வருகின்ற சாமி பல கோடி
ஏடு பல போற்றிடும் உந்தனது பெருமை
எண்ணுவோர் வாழ்விலே இல்லையொரு சிறுமை
நாடுபல உன்னுடைய திருநாமம் சொல்லும்
நம்பிக்கை கொள்வோர்கள் வினையோடிச்செல்லும்
தேடுமுயர் வில்லூன்றிப் பதியினில் வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்

09. பெருவழி சிறுவழிப் பாதைகளென்று
பக்தியுடன் வருகின்ற பக்தர்கள் கூட்டம்
ஒருவழி தெரியாமல் உருகியே நிற்பார்
உனைக்கண்ட போதிலே தன்னையே மறப்பார்
கருவிழிக் காந்தனே கலியுக வரதனே
கானக வாசனே காத்தருளும் நேசனே
அருளார் வில்லூன்றிப் பதியினில் வாழும் - ஸ்ரீ
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சாதி மதம் பாராத தர்மசாஸ்தாவாய்
தாயன்பில் உயர்ந்தவனே ஆடீர் ஊஞ்சல்
ஆதிமுதலானவனே ஆடீர் ஊஞ்சல்
அடியார்க்கு அடியவனே ஆடீர் ஊஞ்சல்
நீதி வடிவானவனே ஆடீர் ஊஞ்சல்
நெறிதரும் நாயகனே ஆடீர் ஊஞ்சல்
சோதிவடிவானவனே ஆடீர் ஊஞ்சல் - திருமலை
தர்மசாஸ்தாவே ஆடீர் ஊஞ்சல்

## வாழி

உயர்வான தெய்வங்கள் உண்மைநெறி வாழி
உயிர்தந்த ஐயப்ப சுவாமியருள் வாழி
பெயர் கொண்ட கறுப்பண்ணச் சாமியருள் வாழி
பெருமைமிகு கடுப்பண்ணச் சாமியும் வாழி
அயராது உழைக்கின்ற அடியார்கள் வாழி
அன்பான நெஞ்சங்கள் அயலவர்கள் வாழி
வியந்திடும் வில்லூன்றிப் பதிநகரும் வாழி
விரும்பியே பாடுவோர் பணிசெயல் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

வில்லூன்றிப் பதியமர்ந்த விநாயகர்க்கும் வேலவர்க்கும்
விருப்புடனே இங்கமர்ந்து வினைதீர்க்கும் ஐயனுக்கு (மங்களம்)

தேவாரப் பெருமை கொண்ட சிவனார்க்கும் பார்வதிக்கும்
தேடிடும் திருமாலுக்கும் தெய்வங்கள் யாவருக்கும் (மங்களம்)

காவல் தெய்வம் என்றழைக்கும் கறுப்பனுக்கும் கடுத்தனுக்கும்
ஆவலுடன் தொண்டு செய்யும் அடியவர்க்கும் அன்பருக்கும் (மங்களம்)

பந்தள ராஜனுக்கும் வாபரெனும் தோழனுக்கும்
மங்களச் செல்வியான மஞ்சமாதா அன்னையர்க்கும் (மங்களம்)

தர்மசாஸ்தா குழுவினர்க்கும் தானங்கள் செய்வோர்க்கும்
தாயாக இருப்பவர்க்கும் தமிழ்தந்த பாவலர்க்கும் (மங்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு

ஸ்ரீ தர்மசாஸ்தா ஹரிஹரசுதன் ஐயப்ப சுவாமி யாத்திரை குழுவினர்

38/1, கந்தசுவாமி கோவில் வீதி,

வில்லூன்றி.

19.12.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org